**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.</u>**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாள் புதன்கிழமை</u>**
**<u>IA 02/2019 in O.S.96/2010</u>**

பத்மநாபன் ... மனுதாரர்/9–ம் வாதி

/எதிர்/

சீதா ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 28.09.2022–ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/9–ம் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பிரான்சிஸ்சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் இன்று கீழ்க்கண்டவாறு வழங்கிடும்....

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் சி.பி.சி.ஆர்டர் 26 ரூல் 9–ன்படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, தாவா சொத்தை பார்வையிட்டு அதன் பூஸ்துதி அமைப்பை பொறுத்து ஒரு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய உத்திரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர்/9–ம் வாதியின் மனுவின் சுருக்கம் :</u>–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 9–ம் வாதி என்றும், மற்ற வாதிகளுக்காகவும் இந்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்து மனுதாரரின் தந்தையும் 1–ம் வாதியுமான சேதுராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும், தாவா சொத்தில் உள்ள கூரைவீடு வசிக்க முடியாத நிலையில் உள்ளது என்று வாதி தரப்பில் கூறப்பட்டிருந்ததை எதிர்த்து பிரதிவாதி தனது 3 வது கூடுதல் எதிர்வழக்குரையில் மேற்படி கூரைவீட்டில் பிரதிவாதி குடியிருந்து வருவதாக பொய்யுரைத்துள்ளார் என்றும், மேலும் மேற்படி வீடு இடிந்து விட்டதாகவும், வசிக்க இயலாத நிலையில் உள்ளதாகவும் வாதி கூறுவது பொய்யாகும் என்று கூறிவிட்டு உண்மை தெரிந்து விடும் என்பதால்தான் வாதிகள் தாவா சொத்தை பார்வையிட்டு

அறிக்கை தாக்கல் செய்ய கமிஷ்னர் கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று பிரதிவாதி தனது 3வது கூடுதல் வழக்குரையில் கூறியுள்ளார் என்றும், எனவே தாவா சொத்தின் பூஸ்துதி அமைப்புக்களை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஒருவரை கமிஷ்னராக நியமனம் செய்வது அவசியமாகிறது என்றும், இல்லையெனில் வாதி தரப்பில் சொல்வது பொய்யாகிவிடும் என்றும், ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் தாவா சொத்தை பார்வையிட்டு அதன் பூஸ்துதி அமைப்பை பொறுத்து ஒரு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய உத்திரவாக வேண்டி மனுதாரர்/9-ம் வாதிதரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

3. <u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

இம்மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுவில் சொல்லப்படும் சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானது என்றும், தாவா சொத்தில் பிரதிவாதி குடியிருந்து வந்த வீடானது தற்போது 6 மாத காலமாக பழமையின் காரணமாக சிதிலமடைந்துள்ளதால் மேற்படி பிரதிவாதி மேற்படி வீட்டை பழுது பார்க்கவும், சீர் செய்யவும் வாதிகள், பிரதிவாதியை மிரட்டி தடுத்துவிட்டதால் மேற்படி வீட்டை பராமரிக்க முடியாமற் போய்விட்டது என்றும், தாவா தாக்கல் செய்த 26.03.2010-தேதியில் தாவா சொத்தில் இருந்த பூமி அமைப்பை மட்டுமே நீதிமன்றம் கருத்தில் கொள்ள முடியும் என்றும், 10 ஆண்டுகள் கழித்து தற்போது உள்ள நிலை இந்த வழக்குக்கு உதவாது என்றும், தாவா சொத்தின் identify பற்றி பூசல் இல்லை என்பதால் கமிஷ்னர் நியமனம் அவசியம் இல்லை என்றும், ஆகையால் 10 ஆண்டுகளுக்கு பின்பு வழக்கின் விசாரணையை தாமதப்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவை சமூகம் கோர்ட்டார் அவர்கள் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரரின் தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சானறாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>6) பிரச்சனைக்கான தீர்வு:-</u>

இருதரப்பிலும் மேற்சொன்னவாறு எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை

இந்நீதிமன்றம் தீரபரிசீலனை செய்ததில், தாவா சொத்து மனுதாரரின் தந்தையும் 1–ம் வாதியுமான சேதுராமனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், தாவா சொத்தில் உள்ள கூரைவீடு வசிக்க முடியாத நிலையில் உள்ளது என்று வாதி தரப்பில் கூறப்பட்டிருந்ததை எதிர்த்து பிரதிவாதி தனது 3 வது கூடுதல் எதிர்வழக்குரையில் மேற்படி கூரைவீட்டில் பிரதிவாதி குடியிருந்து வருவதாக பொய்யுரைத்துள்ளார் என்றும், மேலும் மேற்படி வீடு இடிந்து விட்டதாகவும், வசிக்க இயலாத நிலையில் உள்ளதாகவும் வாதி கூறுவது பொய்யாகும் என்று கூறிவிட்டு உண்மை தெரிந்து விடும் என்பதால்தான் வாதிகள் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய கமிஷ்னர் கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று பிரதிவாதி தனது 3 வது கூடுதல் வழக்குரையில் கூறியுள்ளதால் தாவா சொத்தின் பூஸ்துதி அமைப்புக்களை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஒருவரை கமிஷ்னராக நியமனம் செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்களின் தரப்பில் மனு சங்கதிகளை மறுத்தும், தாவா சொத்தில் பிரதிவாதி குடியிருந்து வந்த வீடானது சிதிலமடைந்துள்ளதால் மேற்படி வீட்டை பழுது பார்க்கவும், சீர் செய்யவும் வாதிகள், பிரதிவாதியை மிரட்டி தடுத்துவிட்டதால் மேற்படி வீட்டை பராமரிக்க முடியாமற் போய்விட்டது என்றும், தாவா தாக்கல் செய்த 26.03.2010–தேதியில் தாவா சொத்தில் இருந்த பூமி அமைப்பை மட்டுமே நீதிமன்றம கருத்தில் கொள்ள முடியும் என்றும், 10 ஆண்டுகள் கழித்து தற்போது உள்ள நிலை இந்த வழக்குக்கு உதவாது என்றும், தாவா சொத்தின் identify பற்றி பூசல் இல்லை என்பதால் கமிஷ்னர் நியமனம் அவசியம் இல்லை என்றும், ஆகையால் 10 ஆண்டுகளுக்கு பின்பு வழக்கின் விசாரணையை தாமதப்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென மறுத்துரைக்கப்பட்ட எதிர்மனுதாரர்களின் சங்கதிகளை மறுத்து எவ்வித வாய்மொழி சாட்சியமோ, ஆவணங்களோ மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

8. இரு தரப்பினர்களின் வாதங்களை பரிசீலித்து பார்க்கும்போது, தாவா சொத்தில் உள்ள கூரை வீடு இடிந்து விட்டதாகவும், வசிக்க இயலாத நிலையில் உள்ளதாகவும் வாதி கூறுவதை மறுத்து, உண்மை தெரிந்து விடும் என்பதால்தான் வாதிகள் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய கமிஷ்னர்

கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று பிரதிவாதி தனது 3 வது கூடுதல் எதிர் வழக்குரையில் கூறியுள்ளதாலும், மனுதாரர் தேவைப்பட்டிருந்தால் முதலிலேயே இம்மனுவை தாக்கல் செய்திருப்பார் என கூறிய காரணத்தினாலேயே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேலும் தாவா சொத்தில் பிரதிவாதி குடியிருந்து வந்ததாக எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை பரிசீலித்து பார்க்கும்போது, அசல் வழக்கின் விசாரணையின்போதுதான் இம்மனுவிற்கான தீர்வினை காணமுடியும் என்றும், இம்மனுவை அனுமதித்தால் அசல் வழக்கின் விசாரணைக்கும் பாதகம் ஏற்படும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. தாவா சொத்தை மனுதாரர் எந்தவித ஆட்சேபனையும் இல்லாமல் அனுபவித்து வருகிறார் என்பதை முதலில் ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். மாறாக நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கிற்கான ஆவணங்களை உருவாக்க முயலக்கூடாது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் சொல்லியுள்ளது. மனுதாரரின் மனுவை ஆராய்கையில் தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று எந்தவிதமான வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் மூலமாக நிரூபிக்கவில்லை. மாறாக தாவா சொத்து குறித்து சாட்சியங்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டுமே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது எதிருரையில் கூறியுள்ள

**Kandasamy and another Vs Syed Hashim**

**(2014) 1 M.L.J.365**

It is well settled proposition of law that for the purpose of collecting evidence, no party can invoke order 26 Rule 9 C.P.C. seeking appointment of Advocate commissioner.

என்ற வழக்கின் தீர்ப்பின்படி பரிசீலிக்கையில், அவரவர் கட்சிக்கு தேவையான ஆவணங்களை அவரவர் தாக்கல் செய்ய வேண்டுமே தவிர, கமிஷ்னர் மூலம் சாட்சியம் சேகரம் செய்ய அனுமதிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**Gajendran Vs. Kupu and others**

**(2017 (3) TLNJ 238 Civil)**

என்ற வழக்கில்;

*The court cannot appoint an Advocate commissioner in order to secure evidence which will support either of the parties. The parties to the suit are bound to establish their respective*

*case through oral and documentary evidence and they cannot seek the assistance of the court to appoint an advocate commissioner for the collection of evidence or to establish their case.*

**Sevugan Vs Chinnathambi**

(2016 SCC online MAD 30464)

**என்ற வழக்கில்;**

*It is settled law that Advocate commissioner cannot collect the evidence to prove the possession of the suit property.*

**Jagadeswari Vs Kandasamy & others**

(2014 (5) LW 361)

**என்ற வழக்கில்**

*Advocate Commissioner cannot be appointed to collect material evidence to prove the case, the fact of possession.*

மேற்படி வழக்குகளின் அடிப்படையிலும் ஆராய்கையில், மனுதாரரும் தம்முடைய வழக்கை நிரூபிக்க வேண்டி ஆதாரத்தை திரட்டும் நோக்கத்தின் அடிப்படையிலும், சுவாதீனத்தை நிரூபிக்க வேண்டியும், இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதால் மனுதாரர் கோரியபடி அவரது மனு ஏற்கத்தக்கதல்ல என்று முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 14–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்)திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை

(ஒப்பம்)திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.